படித்ததில் பிடித்தது… – The life of Mine

thelifeofmine3.wordpress.com/2023/10/29/%E0%AE%AA%E0%AE%9F%E0%AE%BF%E0%AE%A4%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B2%E0%AF%8D-%E0%AE%AA%E0%AE%BF%E0%AE%9F%E0%AE%BF%E0%AE%A4%E0%AE%A4%E0%AF%81-what-i-like-is-in-what-i-read-%E2%9D%A4%EF%B8%8F/

October 29, 2023

ஏதாவதொரு தாய் தன் பிள்ளையை கொஞ்சும்போது,
தனித்து நிற்கும் பிள்ளைக்கு, தானாகவே வருகிறதே.
கொஞ்சமாக தாய் ஏக்கம்!
அப்படித்தான் எனக்கும் கூட உன் ஏக்கம் வருகிறது.
காதல் ஜோடிகளை கண்டவுடன்!

– அறியப்படாதவர்



உனைப் போல் உலகில் எவருமில்லை என்ற பொய்களை எல்லாம் எப்போதும் நான் உன்னில் சேர்ப்பதில்லை..
ஆனால் உனைப் போல் எனக்கே எனக்காய் என்று எவரும் இருந்ததுமில்லை. இனி இருக்கப் போவதுமில்லை. என்பது மட்டும் பொய்மைக்குள் அடங்காத ஓர் பூரணத்தின் உண்மை.

-ஷாரு

புத்தகத்திலிருந்து சில வரிகள்...

காமம் அசிங்கமென்றால் கலவி கொண்டதன் பலனாய் நம்மைப் பெற்றெடுத்தவர்களை மதிக்க நமக்குக் கற்றுக்கொடுக்கப்பட்டது ஏன்? காமத்திலிருந்து பிறந்தவை எல்லாம் புனிதமானவை என்றால் எப்படி காமம் என்ற வார்த்தை மட்டும் அசுத்தமாக முடியும்?

எதை மறைத்து வைக்கிறோமா. எதைக்குறித்து தவறாக பேசுகிறோமோ எதைத் தெளிவாக யாரையும் அறிய முடியாமல் செய்கிறோமோ அதன் பால் மனிதர்களுக்கு ஈர்ப்பும் அறிந்து கொள்ளும் சுவாரசியமும் அதிகரிக்கத்தானே செய்யும் இதில் ஆச்சர்யம் ஒன்றுமேயில்லை…

அன்பு என்பது இருவருக்குள் ஏற்படும் ஒரு வேதியியல் இணைப்பு எனில் காமம் என்பது இருவருக்குள் ஏற்படும் ஒரு உயிரியல் இணைப்பாகும்..!

உண்மையில் நாம் அன்புக்கும் மரியாதைக்கும் யாசித்துக் கொண்டிருக்கின்றோம். நம்மீது அன்பையும் மரியாதையும் செலுத்த நாம் மற்றவர்களையும் நிர்ப்பந்திக்கிறோம்.

திருமணம் என்பது இருவர் தங்களிடையே காதல் குறையாமல், வாழ்நாள் வரையில் இருப்பதற்காக மேற்கொண்ட உடன்பாடு அதுவே ஒரு முரணாக தெரிகிறது.

காதல் என்பது நடந்துகொண்டே இருக்கும், காதல் என்பது மலர்ந்துகொண்டே இருக்கும். ஒருவர் அவர் இதயத்திற்கேற்ப எத்தனை நபர்களை வேண்டுமானாலும் காதலிக்கலாம். அவர் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பலபேரை பல சூழல்களில் அவர் மீண்டும் மீண்டும் காதலிக்கலாம்..!

நட்பில் ஆலோசனைகள் வழங்கிக்கொள்வோம். ஆனால் தம் ஆலோசனைப்படிதான் அவர் நடக்க வேண்டும் என நிர்ப்பந்திக்கமாட்டோம். ஆளுமையோ அடக்கமோ நட்பில் தலை தூக்குவதில்லை…

அன்பின் வடிவான இதயம் வாழ்க்கை முழுதும் மீண்டும் மீண்டும் காதல்வயப்படும்.

– லதா